



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.8.2025) உத்தண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை சோழிங்கநல்லூர் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தை தணிப்பதற்காக தெற்கு பக்கிங்காம் கால்வாயிலிருந்து கடல் வரை நேரடி பெருமுடிய கால்வாய் அமைத்தல் மற்றும் அம்பத்தூர் தொழில்துறை பகுதிகளில் வெள்ள பாதிப்பை குறைப்பதற்காக 130.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மை ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த் ரமேஷ், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், மண்டலக் குழுத் தலைவர் வி. இ. மதியழகன், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் சு.கோபால கிருஷ்ணண் உள்பட அரசு அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தென்சென்னை மற்றும் அம்பத்தூர் மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றம்!

# ரூ.91 கோடியில் புதிய நேரடி கால்வாய் - ரூ.130 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மைத் தீர்வுப் பணிகள்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் முன்னிலையில் –

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்!




**சென்னை,ஆக.7-**

**சென்னையில், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் இருந்து ஒக்கியம் மடுவு வழியாக பக்கிங்காம் கால்வாய் மூலம் மழைநீர், கடலில் கலக்கின்ற வகையில், நீர்வளத்துறை மூலம் ரூ.91 கோடி மதிப்பில் புதிய நேரடி கால்வாய் அமைக்கும் பணிக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உத்தண்டியில் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் முன்னிலை யில் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.**

இதைத் தொடர்ந்து, அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதியில் பருவமழைக் காலங்களில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுத்திடும் வகையில், ரூ.130 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மை தீர்வுப் பணிகளுக்காகவும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இந்தத் திட்டத்தின் வாயிலாக, அம்பத்தூர் ஏரியில் இருந்து கூவம் நதிக்கு மழைநீரைத் திருப்பிவிடுகிற வகையில், கால்வாய் அமைக்கப்பட இருக்கிறது. இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வருகிற போது, அம்பத்தூர் தொழிற்பேட்டை உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் தேங்குகிற நிலை ஏற்படாது.

தென் சென்னை பகுதி மற்றும் அம்பத்தூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தொடங்கி வைக்கப்பட்டுள்ள இந்தப் பணிகளை விரைந்து முடித்திட, அதிகாரிகளை அப்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

**இதைத் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசிய விவரம் வருமாறு:**

அனைவருக்கும் வணக்கம்.

நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு சார்பாக, பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நம் அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, வடகிழக்குப் பருவமழையின் போது பாதிப்புகள் ஏதும் ஏற்படக்கூடாது என்று தொடர்ந்து ஆய்வுக்கூட்டங்களை நாங்கள் நடத்தி வருகிறோம்.

### பருவமழை ஆயத்தப் பணிகள்

இன்றைய தினம் கூட தலைமைச் செயலகத்தில் நம் தலைமைச் செயலாளர் தலைமையில், பருவமழைக்கான ஆயத்தப் பணிகள் பற்றிய ஆய்வுக்கூட்டத்தை நடத்திவிட்டுத்தான், இந்த நிகழ்ச்சியில் நாங்கள் கலந்து கொண்டுள்ளோம்.

அரசின் ஆய்வுக்கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற முடிவுகளின் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் ஏராளமான பணிகள் ஏற்கெனவே நடந்து வருகின்றன. அதில் ஒரு பகுதியாக இன்றைய தினம் நீர்வளத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற இரண்டு முக்கியமான பணிகளைத் தொடங்கி வைத்துள்ளோம்.

ஒன்று பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியிலிருந்து ஒக்கியம் மடுவு வழியாக, தெற்கு பக்கிங்காம் கால்வாய் மூலம் மழைநீர் எளிதாக வடிந்து கடலைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக, 91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கால்வாய் அமைக்கும் பணியை இன்று தொடங்கி வைத்துள்ளோம். மற்றொன்று, அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதியில் வெள்ளம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக 130 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த வெள்ளம் மேலாண்மைத் தீர்வுப் பணிகளையும் தொடங்கி வைத்துள்ளோம்.

### 8 ஆயிரத்து 500 கனஅடி

பருவமழைக் காலங்களில் தென்சென்னையான வேளச்சேரி, ராம் நகர், பள்ளிக்கரணை, நாராயணபுரம், மடிப்பாக்கம், பெரும்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் வெள்ளம் ஏற்படுவது வழக்கம். கனமழையின்போது பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து சுமார் 8 ஆயிரத்து 500 கனஅடி வெள்ளநீர் வெளியேறுகிறது. ஆனால், ஒக்கியம் மடுவு, தெற்கு பக்கிங்காம் கால்வாயின் வழியே 7 ஆயிரம் கனஅடி நீரை மட்டும் தான் வெளியேற்ற முடியும்.

அதனால், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து தண்ணீர் வெளியேற முடியாமல், தென்சென்னை பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் புகுந்து விடுகிறது. எனவே, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்பதன் அடிப்படையில் ஒக்கியம் மடுவு, பக்கிங்காம் கால்வாய் முதல் வங்கக்கடல் வரை வெள்ள நீர் வடியும் வகையில், புதிய நேரடி கால்வாய் அமைக்கும் பணி நடைபெற இருக்கிறது.

இதனால், இனிவரும் காலங்களில் வேளச்சேரி, நாராயணபுரம், ராம் நகர் உள்ளிட்ட இடங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாது என்று நாங்கள் நம்புகிறோம். அதேபோல், அம்பத்தூர் தொழிற்பேட்டையைச் சுற்றி மழைக்காலங்களில் வெள்ளம் ஏற்படுவது வழக்கம். அம்பத்தூர் ஏரியிலிருந்து, கொரட்டூர் ஏரிக்கு உபரிநீர் கால்வாய் இல்லாததே அதற்குக் காரணம்.

### நீண்டநாள் கோரிக்கை


இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முதலமைச்சரின் உத்தரவின் பேரில், ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மைத் தீர்வுப் பணித்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் மூலம் அம்பத்தூர் ஏரியிலிருந்து கூவம் நதிக்கு கால்வாய் அமைத்து, அம்பத்தூர் ஏரியிலிருந்து சுமார் 350 கனஅடி நீரை கூவம் நதிக்குத் திருப்பிவிட வழிவகை செய்யப்படும்.

இந்த பணி நிறை வடைந்தால், அம்பத்தூரிலும் வெள்ள பாதிப்பு ஏற்படாது. இந்த இருபணிகளையும் தொடங்கியதன் மூலம், தென்சென்னை மக்கள் மற்றும் அம்பத்தூர் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இந்தப் பணிகள் பயன்பாட்டிற்கு வரும் வேளையில், பருவமழையின் போது முந்தைய ஆண்டைப்போல், வரும் காலங்களில் வெள்ள பாதிப்பு நிச்சயம் இருக்காது. அரசு மேற்கொள்ளும் இந்தப் பணிகளுக்கு பொதுமக்கள் தங்களின் முழு ஒத்துழைப்பையும் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பத்திரிகையாளர் சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

# ஆகஸ்ட் 7 தமிழர்கள் தலைமைப் போராளியை இழந்த நாள்!



திருவாரூரை அடுத்த திருக்குவளை என்னும் சிற்றூரில் பிறந்த அண்ணாவின் தம்பி பெரியாரின் மாணவன் தமிழர்களின் கலங்கரை விளக்கம் தமிழ் தாயின் தவப்புதல்வன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 94 ஆண்டுகள் 65 நாள்கள் சிறந்த போராளியாக வாழ்ந்து, 7.8.2018 செவ்வாய் மாலை 6.10 மணிக்கு மறைவுற்றார்.

2018 சூலை 27 இரவு ஆழ்வார்ப்பேட்டை காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தியக் குடிஅரசுத் தலைவர், ராகுல் காந்தி முதலானோர் கலைஞர் உயிரோடு இருக்கும் போதே நேரில் வந்து அவரைப் பார்த்தனர். காவேரி மருத்துவக் குழுவினர் எவ்வளவோ போராடியும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

டாக்டர் கலைஞர் அவர்கள் 27.7.1969 இல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 7.8.2018 முடிய 49 ஆண்டுகள் 10 நாள்கள் தி.மு.க.வின் தலைவராக மிக வெற்றி கரமாகச் செயல்பட்டார்; அக்கட்சியை மக்கள் நாயக நெறியில் கட்டிக் காத்தார்.

1969ஆம் ஆண்டு பிப்ரவரியில் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார். அவர் பதவி வகித்த காலத்தில் தந்தை பெரியார் 1973 திசம்பர் வரை என்னென்ன கோரிக்கைகளை முன்வைத்தாரோ, அவற்றை முழு மனதோடு ஏற்று நிறைவேற்றினார்.

காட்டாக, இடஒதுக்கீடு கொள்கை. தமிழக முதலமைச்சராகத் திகழ்ந்த கு. காமராசர் எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோருக்கு 25 விழுக்காடும், பட்டியல் வகுப்பினருக்கு 16 விழுக்காடும் ஆக 41 விழுக்காடு மட்டுமே வழங்கினார்; மு. பக்தவத்சலம் காலத்திலும் 41 விழுக்காடு இடஒதுக்கீடே தொடர்ந்தது.

இடையில், உச்சநீதிமன்றம் கர்நாடக அரசு 50 விழுக்காட்டுக்குமேல் தந்த இடஒதுக்கீடு செல்லாது என்றும், இடஒதுக்கீடு பெறும் மூன்று வகுப்பாருக்கும் சேர்த்து, 50 விழுக்காட்டுக்குக் குறைவாகவே தரப்பட வேண்டும் என்றும் 1962இல் தீர்ப்பு அளித்தது.

தந்தை பெரியார் அதைச் சுட்டிக்காட்டி, தமிழகத் தில் பிற்படுத்தப்பட்டோருக்குத் தரப்படும் இடஒதுக்கீட்டில் 8 விழுக்காடு மேலும் கூட்டி, அதைப் பிற்பட்டோருக்கு வழங்கலாமே எனக் கோரினார்.

அதை அப்படியே ஏற்றுக்கொண்ட கலைஞர், 1969 நவம்பரிலேயே, ஏ.என். சட்டநாதன் தலைமையில் மூவர் கொண்ட குழுவை அமைத்தார். அக்குழுவும் 8 விழுக்காடு சேர்த்திடப் பரிந்துரைத்தது.



**சைதை சாதிக்**
தலைமைக் கழகப் பேச்சாளர்

இடையில் தமிழகப் பட்டியல் வகுப்பினர் மக்கள் தொகையில் 16 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாக உயர்ந்துவிட்டது. எனவே, தமிழகப் பிற்படுத்தப்பட் டோருக்கு 25ளு + 6ளு = 31ளு ம்; பட்டியல் வகுப்பி னருக்கு 16ளு + 2ளு = 18ளு வழங்கி கலைஞர் ஆணை பிறப்பித்தார்.

அதேபோல், “அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதற்குச் சட்டம் இயற்ற வேண்டும் - இல்லாவிட்டால் போராட்டம் நடத்திச் சிறைக்குப் போவேன்” எனத் தந்தை பெரியார் 1969 அக்டோபரில் கோரிக்கை வைத்தார். அதை முன் வைத்து 1973 திசம்பர் 8, 9இல் சென்னையில் சமூக இழிவு ஒழிப்பு மாநாடு நடத்தினார். ஆயினும் 1971-லேயே அதற்கான சட்டத் தைக் கலைஞர் நிறைவேற்றினார். 1972இல் அச்சட்டம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

தமிழ்நாட்டில் தனியாரிடம் இருந்த பேருந்துகளை நாட்டுடைமையாக்கினார்.

தந்தை பெரியார் 24.12.1973இல் மறைவுற்றார். தந்தை பெரியாரின் உடலைத் தமிழக அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யவேண்டும் என்று கலைஞர் முடிவெடுத்தார்.

தலைமைச் செயலாளரும் மற்ற உயர் அதிகாரிகளும் “பெரியார் எந்த அரசுப்பதவியிலும் இருக்கவில்லையே” என்றனர். “காந்தியார் எந்தத் பதவியிருந்தார்? அவர் உடலை அரசு மரியாதையுடன் இந்திய அரசு அடக்கம் செய்ததே” என்று திருப்பிக் கேட்டார், கலைஞர். “மேலும் என் பதவி போனாலும் போகட்டும்; கவலை இல்லை; ஏற்பாடு செய்யுங்கள்” என ஆணையிட்ட துணிவாளர் அவர்.

பெரியாரின் எழுத்து, பேச்சு எல்லாவற்றையும் 1971-1973இல் நான் தொகுத்தேன். திருச்சி சிந்தனை யாளர் கழகத்தார் 1.7.1974-இல் வெளியிட்டனர். முதல் தொகுதியை முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார்.

சங்கத்தின் சார்பில் மருத்துவர் ச. இராமதாசு, அவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு கோரிப் போராடினார். எம்.ஜி.ஆர். அதுபற்றிக் கவலைப்பட வில்லை.

டாக்டர் கலைஞர் 1989 தேர்தலில் வெற்றி பெற்றார். உடனே தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக் கான ஒதுக்கீடு 50 விழுக்காட்டில் 30 விழுக்காடு பிற்பட்டோருக்கும், 20 விழுக்காடு மிகப் பிற்பட்டோ ருக்கும் எனப் பிரித்து அளித்தார். இது மிகப்பிற்பட் டோருக்கு மிகப் பெரிய உதவி. அடுத்து பட்டியல் வகுப்பினருக்கு உள்ள 18 விழுக்காடு அன்னியில், தமிழகப் பழங்குடிகளுக்கு 1 விழுக்காடு தனியே வழங் கினார். கிராமப்புற மாணவர்களுக்கு 15 விழுக்காடு ஒதுக்கீடு அளித்தார்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்தாரும் செய்யத் துணியாததை - ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்பச் சொத்தில் சமபங்கு அளித்துச் சட்டம் செய்தார்.

பத்தாம் வகுப்பு வரை தமிழை கட்டாய பாடமாக்கினார்.

பெண்களுக்குக் கல்வியிலும், அரசு வேலையிலும் 30 விழுக்காடு தனி ஒதுக்கீடு வழங்கினார். உள்ளாட்சிப்பதவிகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு வழங்கினார்.

முசுலிம்களுக்கும், கிறித்துவர்களுக்கும், அருந்ததியர்களுக்கும் உள் ஒதுக்கீடு வழங்கினார்.

இந்தியாவிலே முதல் முறையாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்.

இந்தியாவில் முதல் முறையாக பட்டியல் இன மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் கொண்டு வந்தார்.

சாதி ஒழிப்புக்குத் தூண்டுதல் செய்யும் வகையில், 237 இடங்களில் “பெரியார் நினைவு சமத்துவபுரம்” அமைத்தார். அதில், 40 விழுக்காடு வீடுகளைத் தீண்டப்படாத வகுப்பினருக்கும் 25 விழுக்காடு வீடுகளைப் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கினார்.

பரிதிமாற் கலைஞரும், மறைமலை அடிகளும், பாவாணரும், தமிழ்மொழி அறிஞர்களும் விரும்பிய வண்ணம் “செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனத்தைச்” சென்னையில் அமைத்தார்.

“குறளோவியம்” தீட்டினார். திரைப்படத் துறைக்குக் கதை-வசனம் எழுதிப் புகழ் பெற்றார். 1.1.2000இல் கன்னியாகுமரியில் வள்ளுவருக்கு 133 அடி உயரச் சிலையை நாட்டினார். சென்னையில் “வள்ளுவர் கோட்டம்” அமைத்தார்.

23.3.2010இல் சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் “பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் - விரிவாக்கம் செய்யப்பட்ட 20 தொகுதிகளை” வெளியிட்டார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் திராவிட இயக்கத்துக்குக் கெட்டியான அடித்தளத்தை நாட்டிச் சென்றுள்ளார்.

தமிழக மக்களும், உலகெங்கும் வாழும் தமிழர்களும் என்றும் தலைவர் கலைஞர் அவர்களை மறக்க மாட்டார்கள். வாழ்க! வளர்க! கலைஞரின் புகழ்! மண், மொழி, மானம், காக்க தலைவர் தளபதி தலைமையில் அணிவகுப்போம் கலைஞரின் புகழ் பாடுவோம்.


## இன்று முத்தமிழறிஞர் கலைஞரின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# தேனி வடக்கு மாவட்டத்தில் நகரம் - கிராமங்கள் தோறும் புகழஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிவிப்பு!

தேனி, ஆக.7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்ட் 7 இன்று தேனி வடக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. என்று தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளரும், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் அறிக்கையில் அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை பின்வருமாறு.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது எழுத்து திறன், அரசியல் ஆற்றல், மற்றும் சமூக நலனுக்காக செய்த பணிகள் மூலம் தமிழர்களின் மனதில் நிலைத்தவர். அவரது படைப்புகள், சாதனைகள், மற்றும் சமூக மாற்றத்திற்காக அவர் ஆற்றிய சேவைகள் மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். நாவில் செந்தமிழின் இனிமையும், வீரியத்தையும், மென்மையையும், மேன்மையையும் களிநடம் புரிய வைத்த கன்னித்தமிழ் படைப்பாளியாக தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து முதலமைச்சர்களுக்கும். பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக தலைவர் கலைஞர் அவர்கள் இருந்துள்ளார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கலைஞர் செய்து நிறைவேற்றிய திட்டங்கள், நிறைவேற்றிய சாதனைகளின் மூலமாக இன்னும் நூறு ஆண்டுகளுக்கு அவருடைய பெயர் இந்த நாட்டில் நினைவு கூரப்படும். முத்தமிழின் முகவரியாக, புகழ் சின்னமாக ஒளி வீசும் தலைவர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வாக (07.08.2025 - வியாழக்கிழமை) இன்று தேனி வடக்கு மாவட்டத்தில், ஒன்றியம், நகரம், பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.